மூலிகை சேனைக்கிழங்கு

1. அசுவினி ஏபிஸ் காஸிபி, பென்டலோனியா நைக்ரோ நெர்வோசா

**சேதத்தின் அறிகுறி:**

- இளம் நாற்றுகளை சேதப்படுத்தும்
- குஞ்சுகளும், பூச்சிகளும் இலைகள் மற்றும் தண்டுகளில் சாறை உறிஞ்சும்
- முடிவாக, புதிதாக வளரும் குருத்தை வளரவடாமல் தடுக்கும்

**பூச்சியின் விபரம்:**

- உருளை வடிவாகவும், மஞ்சள் கலந்த பச்சையாகவும் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- வேப்பம் எண்ணெய் 0.5 சதவிதம் (அ) வேப்பங்கொட்டைச்சாறு 5 சதவிதம்
- ஒட்டுண்ணிகள் மற்றும் இரைவிழுங்கிகளை பாதுகாக்கலாம்

2. சிவப்புநிற சிலந்திப்பூச்சி, டெட்ரானைக்கஸ் யுர்டிகே

**சேதத்தின் அறிகுறி:**

- சிலந்தி உண்ட இடங்களில் வெள்ளைப் புள்ளிகள் தோன்றும்
- முற்றிய நிலையில் இலை முழுவதும் வெள்ளையாகி, காய்ந்துவிடும்

**பூச்சியின் விபரம்:**

- குஞ்சுகளும், பூச்சிகளும் சிவப்பு நிறத்தில் தோன்றும்

- இலைகளின் அடிப்பகுதியில் முட்டைகள் காணப்படும். இது வெள்ளையாகவும், உருளை வடிவமாகவும் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- டைக்கோபால் 3 மி.லி (அ) நனையும் கந்தகம் 2 கிராம் / லிட்டர்